## இயல் ஐந்து

# சென்னையில் உள்ள அடியார்கள் திருத்தலங்கள்

## இயல் - ஐந்து

# சென்னையில் உள்ள அடியார்கள் திருத்தலங்கள்

யோக மார்க்கத்தில் நின்று வெற்றி பெற்றவர்கள், சித்தி பெற்றவர்கள் சித்தர்கள். சித்திகள் எட்டு வகைப்படும். அவை அணிமா, மணிமா, மகிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம், கரிமா என்பன, இவையே எண்வகை சித்திகளாகும். இவற்றை அட்டமசித்தி என்பர். இவ்வெண்வகை சித்திகளையும் பெற்றவர்களையே சித்தர்கள் என்பர். சித்தர்கள் என்போர் இவ்வெட்டு வகை வல்லமையும் பெற்றவர்கள் என்றே புராணங்களில் காணப்படுகின்றன என்று சாமி சிதம்பரனார் 'சித்தர்கள் கண்ட விஞ்ஞான' தத்துவம் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.[1]

சித்தர்கள் பண்டைத்தமிழகத்தில் வாழ்ந்தவர்கள் என்பதனை பலரும் குறிப்பிடுகின்றனர். திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வான்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி கொங்கணர் பதஞ்சலி, நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டிச் சித்தர், சட்டை முனி, சுந்தரானந்ததேவர், குதம்பைச்சித்தர், கோரக்கர் இவர்களே பதினெண் சித்தர்கள் என்பர்.

சித்தர்கள் பற்றிய சித்தர் தொகுப்பு 'பெரிய ஞானக் கோவை' ஆகும். அதன் துணை கொண்டும், சித்தர்களின் தத்துவம், இறைக் கோட்பாடு, வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை முன்னிலைப் படுத்தியும் சித்தர்கள் பற்றிய கருத்துரைகள் விரித்துரைக்கப்படுகின்றன. சென்னையில் அடியார்கள் பலரும் வாழ்ந்து இறைக் கொள்கைகளைப் பதிவு செய்துள்ளனர். அத்தகைய அடியார்கள் இடம்பெற்ற திருக்கோயில்கள் கள ஆய்வு வழியே கண்டறியப்பட்டு தொகுத்துரைக்கப்படுகின்றன.

## சித்தர்கள் பாடிய சென்னைத் தலங்கள்

**சித்தர் பாடல்கள்** என்னும் நூலில் குறிப்பிடப்படும் 32 சித்தர்களுள் வான்மீக சித்தர் என்பார் ஒருவர். இவர், 'பதினெண் சித்தர்களுக்குத் திறவுகோல்' என்று பாராட்டப்படுகிறார்.[1] இஃது இந்நூல் கூறும் புதிய செய்தியாகும்.

இவர், புற இயற்கையையும் அக இயற்கையையும் ஒன்றாகக் கண்டு, உளவியல் கொள்கைக்கும் ஆன்மீகக் கொள்கைக்கும் பிணக்கு ஏற்படாமல் தவறான எண்ணத்தால் மாறுபாடும் வேறுபாடும் காணாமல், சீர்திருத்தம் காணும் சித்தர்களுக்கு முன்னோடியாக விளங்குகிறார்.[2]

சித்தர்கள் எம் கடன் பணி செய்து கிடப்பதே என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர்கள். மனித சமுதாயம் வளமும், நலனும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற நன்னோக்கம் கொண்டவர்கள்.

### சித்தர்கள்

"உலக ஞானத்திலும் பரம ஞானத்திலும் தேர்ந்து தெளிந்து, தான் கண்ட உண்மைகளை உலகிற்கு வெளிப்படுத்தி, ஆன்றவிந்தடங்கிய இயற்கை விஞ்ஞானிகளே சித்தர்கள். பொதுமையான அன்பாலும் தன்னலமற்ற தொண்டாலும் மயக்கமற்ற அறிவாலும் பிரம்ம ஞானத்தை மட்டுமல்ல, பிரம்மத்தின் ஆற்றலையும் பெற்றவர்கள்.

ஆன்மிக ஞானிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நிலைகளோடு அமைய சித்தர்கள் மேற்கண்டவற்றோடு வாதம், வைத்தியம் ஆகியவற்றில் மேம்பட்டு மானிடச் சேவையை மகேசுவரன் சேவையாகச் செய்தவர்கள்.

பாராட்டோ பயனோ எதிர்பாராமல், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே கண்ட உத்தமச் சான்றோர்கள் இந்தச் சித்தர்கள். மனிதர்கள் மேம்பட்டது சடங்குகளினால் அல்ல, மனத்தூய்மையினாலும் தொண்டினாலும்தான் என உணர்த்தி அதற்கேற்ப வாழ்ந்து காட்டியவர்கள். அவர்களுடைய மதம் அனைவரிலும் இறையைக் காணும் அன்பு மதம். இறைக் கொள்கையினாலோ சனாதன தர்மத்தின் பெயராலோ பேதங்களை வளர்க்கக்கூடாது எனும் கோட்பாடு உடையவர்கள்; சமரச சன்மார்க்கவாதிகள் ஆவர்.

## சித்தர் கலை

சித்தர் கலை என்பது அறிவியல் மட்டுமல்ல. அது ஒரு வாழ்க்கை நெறியும் ஆகும். உயிரியல், உடலியல், ஆன்மிக இயல், விண்ணியல், இரசாயன இயல், இறையியல் என அவர்களுடைய ஆராய்ச்சிக்கு உள்ளாகாத துறைகளே கிடையாது. இன்றைய அறிவியல் விளக்கங்கள் அவர்கள் விட்டுச் சென்றவையாகவே விளங்குகின்றன.

## சித்த மருத்துவம்

சித்தர்கள் நூல்களுள் மருத்துவத் தொழிலுக்குத் தேவையான, மருந்தியல் தொடர்பான நூல்கள் மட்டுமே சித்த மருத்துவர்களால் பரம்பரையாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. யோக ஞான நூல்கள் தொழில்களைச் செய்யவோ வருவாயைப் பெருக்கிக் கொள்ளவோ பயன் படாமையால் மக்கள் அவற்றில் ஈடுபடவில்லை என்று எண்ண இடமளிக்கிறது.

உலகப் பொருள்களுக்கு அடிப்படையாக உள்ளவை ஐம்பூதங்கள். உடல் அமைப்பும் ஐம்பூதங்களாலேயே அமைந்தவை. ஆகவே ஐம்பூத

சமநிலையைப் பேணினால் நோயற்ற நிலையைக் காணலாம். நோய் உண்டாவதற்குப் புவியியல் காரணங்கள் மட்டுமல்லாமல் சூட்சும காரணங்கள் உண்டென்பதை அறிந்தவர்கள் சித்தர்கள்.

## யோகம்

"யோகம் என்ற சொல்லுக்கு 'ஒன்றித்தல்' 'கூட்டு' என்பது பொருள். ஆன்மா, உடல் ஒருங்கிணைந்து செயல்படுமாறு செய்வது தெளிவாகச் சொல்வதானால், உடம்பையும் மனத்தையும் வயப்படுத்தும் பரிபூரண விஞ்ஞானமே யோகம். மனிதன் சமுதாயத்தின் ஓர் அங்கம். அவன் தன்னையும் ஒழுங்குபடுத்தி, மற்றவர்களுக்கும் பயனளிக்கின்ற தெய்வீக நிலைக்கு உயரும் வண்ணம் நம் முன்னோர்கள் வகுத்த ஆன்ம, மன, உடல் பயிற்சிகளே யோக விஞ்ஞானமாக மலர்ந்துள்ளது. அவற்றை அட்டாங்க யோகம் என நெறிப்படுத்தி இருக்கின்றனர். யோகம், அந்தர் யோகம் எனவும் பகிரங்க யோகம் எனவும் இரு வகைப்படும்.

இருபதாம் நூற்றாண்டளவில் சித்தர்கள் கூறியுள்ள யோகநிலையில் மனப்பயிற்சி, மூச்சுப்பயிற்சி முதலிய பயிற்சிகள் கற்றுத் தரப்படுகின்றன. அத்தகைய பயிற்சிகள் இன்றைக்கு மிகுதியான அளவு இயந்திர கதியில் வாழும் மக்களுக்கு மன உளைச்சலை நீக்கிக் கொள்ளப் பெரிதும் நலம் பயப்பதாக அமைகின்றன. வருவாய் ஈட்டித்தரும் தொழிலாகவும் இன்று மாறியுள்ளமையைக் காண முடிகிறது.

யோகப் பயிற்சிக்குச் சென்றால் பலவித நோய்களும் குணமாகின்றன என்று மக்கள் நம்புகின்றனர். அதனால் சித்தர்கள் எழுதி வைத்த யோகப்பயிற்சிகளுக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளமையையும் காணமுடிகிறது.

யோகப்பயிற்சியை மேற்கொள்ளுவதால் மூளையைச் செம்மைப் படுத்திக் கொள்ளமுடியும். யோகப்பயிற்சி செய்வதால் உடலில் நோய்த் தடுப்புச்சக்தி மிகுதியாகும். எந்த வயதிலும் யோகப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.

**ஆசனம்**

ஆசனம் என்பது தேகத்தை ஒரு குறிப்பிட்ட நிலையில் அமைத்தலேயாகும். ஆசனம், 'தளர்த்துதல்' எனவும் கொள்ளலாம். ஆசனங்கள் எண்ணிக்கை ஒவ்வொர் மரபிலும் ஒவ்வொரு விதமாக சொல்லப்பட்டிருக்கின்றது.

'சித்தர்கள்', எல்லாம் அறிந்த ஞானிகள், தன்னியல்பான மனிதர்களிடமிருந்து மேம்பட்ட ஆற்றல்களையுடையவர்கள்; நீர் மேல் நடக்கவும் நிழலுக்குள் ஒதுங்கவும் வல்லவர்கள்; நெருப்புக்குள் தவஞ்செய்யும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு; மூலிகைகளைப் பற்றி மருத்துவத்துறையில் நிறைந்த அறிவு பெற்றவர்கள் அவர்கள். இரும்பைப் பொன்னாக்கும் ரசவாதக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள். ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் காட்சி தரும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. காடுகளிலும், மலைகளிலும் அவர்கள் அலைந்து திரிவார்கள். குகைகளில் தங்குவார்கள். அவர்கள் எளிய மக்களிடத்தில் பரிவுடையவர்கள். அரசன், கோவில், வேதம் ஆகியவற்றை அலட்சியம் செய்பவர்கள். ஆனால் பொதுவாகக் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். தமிழ் நாட்டில்அறியப்பட்ட, அறியப்படாத எல்லாச் சித்தர்களும் இந்த வரையறைக்குள் அடங்கிடுவர் எனலாம் [3].

சித்தர்கள் அத்தனை பேரும் கற்றறிந்தவரல்லர். பாமரராய் வாழ்ந்தும், மன்னராய்த் திளைத்தும் செல்வராய்ச் செழித்தும், யோகியராய் நிலைத்தும் நின்ற சித்தர்களும் உண்டு. மதமான பேய் பிடித்தும்,

மாயாசாலங்கள் பொய்வழிபாடுகளாலும் அல்லற்பட்டு வீணாகக் காலங்கடத்தும் மக்களைக் கண்டு, நிலையாமை உணர்ந்து, உருவான சித்தர்களுமுண்டு எனச் சித்தர்கள் இயல்புகளை அறிந்து கொள்ள முடிகிறது.[4]

சித்தர்கள் தம்மை உயர்த்திக் கொண்டதோடு நில்லாமல், உலக மக்களையும் உயர்த்துவதற்குப் பணிகள் பல செய்தனர். சித்தர்கள், மக்களின் மன இருளைப் போக்கி, ஞானஒளி பரப்ப, சிந்தனைச் செல்வத்தை வாரி வழங்கினர்; உடல் நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மருந்து செய்யும் முறைகளைத் தெரிவித்து நூல்கள் இயற்றினர்.

கோள்களின் நிலை, காரிய மாறுபாடு, சுடர்களின் இயக்கம் ஆகியவற்றை விளக்கிச் சோதிடநூல்கள் எழுதினர். நிறைமொழி மாந்தர்களாக விளங்கிய அவர்கள், மறைமொழிகளை 'மந்திரம்' என்ற பெயரால் வழங்கினர்.

மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும் கூர்மையாக்கவும் வெளிப்படுத்தவும் மாந்திரிகங்களை வெளியிட்டனர். தெய்வங்களுக்கு முறைப்படி பூசைகள் செய்யப் பூசைவிதி பற்றிய பாடல்களைப் பாடித் தந்தனர்; ஆத்மசக்தி, யோகநிலை ஆகியவற்றை விளக்கி இலக்கியம் படைத்தனர்.

## சித்தர்கள் பற்றிய குறிப்பு

சித்துகளைச் செய்பவர்கள் சித்தர்களா? சித்தனை (சிவனை) வழிபடுபவர்கள் சித்தனா? சித்திகள் கைவரப் பெற்றவர்கள் சித்தர்களா? சித்தம் உடையவர்கள் (இங்குச் 'சித்தம்' என்பது தெளிவான முடிவு) சித்தர்களா? சித்தத்தை (மனத்தை) ஒரு நிலைப்படுத்தியவர்கள் சித்தர்களா? அனுபூதி ஞானம் பெற்றவர்கள் சித்தர்களா? யோக மார்க்கத்தில் நின்று

வெற்றி பெறுகிறவர்கள் சித்தர்களா? மூண்டு எரியும் அக்னிக்குள் மூழ்கி, முந்நீருள்ளிருப்பினும் மூச்சடக்கி, தாண்டிவரும் வன்புவியைத் தாக்கி வலிமை காட்டுவோர் சித்தரா? இவ்வினாக்களுக்கு விடைகண்டு வாழ்ந்த சித்தர்கள் பலரின் வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர்கள் அறிவுறுத்திய வாழ்வியல் நெறிகள் அல்லது வாழ்வியல் கல்வியையும் குறித்துக் காண்பது இப்பகுதியின் நோக்கமாகும். சென்னையில் சித்தர்களாக அடியார்கள் பலரும் வாழ்ந்துள்ளனர். அத்தகைய அடியார்கள் சிலருடைய சிறப்புகளையும் இவ்வியல் ஆராய்கின்றது.

சித்தர்கள் பக்திமான்களா, ஞானிகளா, யோகிகளா என்றால், அவர்கள் யோகிகளே. ஆன்மிக நெறி நின்று உள்ளத்தையே கோயிலாகக் கருதி, உயிரினங்களை வணங்கிய யோகநெறி சித்தர்கள், சமயங்களுக்கும் சடங்குகளுக்கும் அப்பாற்பட்டு அனைத்து உயிர்களிலும் நேயத்தையும் இறைத்தன்மையையும் கண்டவர்கள்.

சித்தர்கள் காடு சென்று, காயேனும் கனியேனும் காய்ந்த சருகேனும் உண்டு, மூக்கைப்பிடித்து முக்திக்கு வழி தேடுபவர்களாயினும், சமுதாயத்திலிருந்து விலகிப் போகாதவர்கள். சமுதாயம் சீர்திருத்தப்பட வேண்டும் என்ற பெருநோக்கும், போக்கும் உடையவர்கள்.

## சித்தர்கள் வாழ்ந்த காலம்

சித்தர்கள் நீண்ட காலம் இத்தமிழ் மண்ணில் வாழ்ந்திருக்க வேண்டும். இதனை,

*நிலந்தொட்டுப் புகாஆர் வானமேறார்*
*விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்.*
*நாட்டி னாட்டி னூரி னூரிற்*
*குடிமுறை குடி முறை தேரிற்*
*கெடுநரு முளரோ நங்காதலோரே* [5]

நிலத்தினுள் உறைதல், வானத்தில் மறைதல், கடல்மேல் நடத்தல் என்பவை அட்டமா சித்திகளுள் அடங்கும். இக்கருத்தினை வைத்துத் தமிழகத்தில் சித்தர்கள் சங்க காலம் அளவிலேயே நிலவி வந்துள்ளது . இப்பாடல் வழியே நோக்கும்போது தலைவனைப் பிரிந்த தலைவிக்கு ஆறுதல் தருவதாக அமைகிறது. நிலத்துள் புகல், வானகம் ஏறல், நீர்மேல் நடத்தல் போன்ற செயல்களைச் சாதாரண மனிதர்கள் செய்ய முடியாது. அவை சித்தர்களால் மட்டுமே செய்யமுடியும் என்றுரைப்பதன் மூலம் சித்தர்கள் பற்றிய சிந்தனைகள் தமிழ் மக்களிடம் நிலவியிருக்க வேண்டுமென்றே இந்தக் குறுந்தொகைப் பாடல் உணர்த்துகிறது.

சாதி, சமயம் இவை தொடர்பான சடங்குகள் முதலானவற்றை வன்மையாகக் கண்டித்த நன்மையாளர்கள் சித்தர்கள்.

'சித்தர்' என்னும் சொல் 'சித்' என்பதை வேர்ச்சொல்லாகக் கொண்டு பிறந்தது.

சித்து, சித்தி, சித்தம், சித்தர் முதலான சொற்களுக்கு இடையே பொருள் தொடர்பு உண்டு.

'யோகசமாதி உகந்தவர்கள் சித்தர்கள்' என்று திருமூலர் கூறுகிறார். 'வேதாந்த சித்தாந்த சமரச தன்னிலை பெற்ற வித்தகர்கள் சித்தர்கள் என்பது தாயுமானவர் கூற்று. 'சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்' என்பது அகத்தியர் தரும் விளக்கமாகும்.

'அனுபூதி ஞானம் – பெற்றவர்களே சித்தர்கள்' எனக் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரும், 'சித்தன் என்பது, சிவபெருமானுக்கு உரிய பெயர். அச்சித்தனை வணங்குவோர் சித்தர்கள்' என மாணிக்கவாசகரும் கூறுகிறார்கள்.

### சித்தர் தன்மை

*மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்*
*முந்நீருள் ளிருப்பினும் மூச்சடக்கு வோம்*
*தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி*
*விடுவோம்......* [7]

என்னும் பாம்பாட்டிச் சித்தரின் கூற்றுக்கு ஏற்ப, சித்தர்கள் வாழ்ந்து மறைந்துள்ளனர்.

### சித்தர்களின் எண்ணிக்கை

சித்தர்கள் எண்ணிக்கையளவில் மிகுதியானவர்களாக இருப்பினும் அவர்களைப் பதினெட்டு என்ற எண்ணிக்கையில் அடக்குகின்றனர்.

திருமூலர்

இராமதேவர்

கும்ப முனி

இடைக்காடர்

தன்வந்திரி

வான்மீகி

கமலமுனி

போகநாதர்

குதம்பைச் சித்தர்

மச்சமுனி

கொங்கணர்

பதஞ்சலி

நந்திதேவர்

போதகுரு

பாம்பாட்டிச் சித்தர்

சட்டை முனி

அந்தரானந்தத் தேவர்

கோரக்கர்

என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி[8] குறிப்பிடுகின்றது.

பதினெட்டுச் சித்தர்களை, நிஜானந்த போதம் என்னும் நூல் கீழ்க்காணுமாறு எடுத்துக் கூறுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அகத்தியர் | 10. | உரோமமுனி |
| 2. | போகர் | 11. | வாசமுனி |
| 3. | நந்தீசர் | 12. | அமலமுனி |
| 4. | புண்ணாக்கீசர் | 13. | கமலமுனி |
| 5. | கருவூரார் | 14. | கோரக்கர் |
| 6. | சுத்தரானந்தர் | 15. | சட்டைமுனி |
| 7. | ஆனந்தர் | 16. | மச்சமுனி |
| 8. | கொங்கணர் | 17. | இடைக்காடர் |
| 9. | பிரம்மமுனி | 18. | குருபிரம்மமுனி *9* |

**அபிதான சிந்தாமணியில்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அகத்தியர் | 10. | மச்சமுனி |
| 2. | போகர் | 11. | வாசமுனி |
| 3. | கோரக்கர் | 12. | கூர்முனி |
| 4. | கைலாசநாதர் | 13. | கமலமுனி |

| | | | |
|---|---|---|---|
| 5. | சட்டைமுனி | 14. | இடைக்காடர் |
| 6. | திருமூலர் | 15. | உரோம ரிஷி |
| 7. | நந்தி | 16. | புண்ணாக்கீசர் |
| 8. | கூன் கண்ணன் | 17. | சுந்தரானந்தர் |
| 9. | கொங்கணர் | 18. | பிரம்மமுனி [10] |

இவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பதினெண் சித்தர்கள் என்ற வழக்காற்றுக் குரியவர்களான, கீழ்க்காணும் 18 சித்தர்களின் வாழ்வியல் நெறிகளும் கோட்பாடுகளும் இந்த ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | கும்பமுனி | 10. | புண்ணாக்சீசர் |
| 2. | நந்திமுனி | 11. | இடைக்காடர் |
| 3. | கோரக்கர் | 12. | பூனைக்கண்ணார் |
| 4. | புலிப்பாணி | 13. | சிவவாக்கியர் |
| 5. | புசுண்டரிஷி | 14. | சண்டிகேசர் |
| 6. | திருமூலர் | 15. | உரோமரிஷி |
| 7. | தேரையர் | 16. | சட்டநாதர் |
| 8. | யூகிமுனி | 17. | காலாங்கி |
| 9. | மச்சமுனி | 18. | போகர் |

என்னும் சித்தர்கள் வரிசையை போகரின் ஜனன சாகரம் தெரிவிக்கிறது.[11]

பெரிய ஞானக் கோவை நாற்பதுக்கு மேற்பட்ட சித்தர்களைப் பட்டியிலிருகிறது.[12]

1. காலங்கி 2. கமல நாதர் 3. கலசநாதர் 4. யூகி 5. கருணானந்தர் 6. போசள் 7. பட்டை நாதர் 8. பதஞ்லி 9. கோரக்கல் 10. பவணந்தி 11. புலிப்பாணி 12. அழுகணி 13. பாம்பாட்டி 14. இடைக்காட்டுச் சித்தர் 15. கௌசிகர் 16. வசிட்டி 17. பிரம்மமுனி 18. விநாயகர் 19. தன்வந்திரி 20. சட்டைமுனி 21. புண்ணாக்கீசர் 22. நந்தீசர் 23. அகப்பேட் 24. கொங்கணர் 25. மச்சமுனி 26. குருபாத நாதர் 27. பரத்துவாசர் 28. கூன்தண்ணீர் 29. கடுசெய் 30. ரோமரிசி 31. காகபுசுண்டர் 32. பராசரர் 33. தேண்யர் 34. புலத்தியர் 35. சுந்தராணந்தர் 36. திருமூலர் 37. கருவூரார் 38. சிவவாக்கியர் 39. தொழுகண் 40. சத்யநாதர் 41. சகோதநாதர் 42. ஆதிநாதர் 43. அனாதிநாதர் 44. வகுளிநாதர் 45. மதங்கநாதர் 46. மச்சேந்திரநாதர் 47. கஜேந்திரநாதர் 48. சோரக்க நாதர் 49. அஷ்டவசுக்கர். 50. சப்தபிஷிக்கர் .

திருவண்ணாமலையில் மட்டும் வாழ்ந்தவர்கள் இத்தனை சித்தர்கள் எனில் தமிழகத்தில் எஞ்சிய பகுதிகளில் வாழ்ந்தவர்களின் எண்ணிக்கையும் கணக்கிடுதல் என்பது இயலாத ஒன்றாகும்.

சென்னையில் இராஜகீழ்ப்பாக்கத்திலிருந்து மாடம்பாக்கம் செல்லும் வழியில் ஸ்ரீ சக்ர மகாமேரு ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் கோயில் உள்ளே 18சித்தர்களின் பிருந்தவான சக்தி பீடம் உள்ளது. அங்குப் பதினெண் சித்தரும் தனித்தனியே கோயில் கொண்டு தரிசனம் செய்யும் முறையில் சிலை வடிவில் காட்சியளிக்கின்றனர். நேரில் சென்று பார்க்கையில் இயற்கையோடு கூடிய சூழலில் சித்தர்கள் பத்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர். சேஷாத்திரி சுவாமிகளின் பிருந்தாவன அறக்கட்டளை பூஜை முறைகளோடு நூலொன்றையும் வெளியிட்டுள்ளனர்.[13] அந்நூலில் உள்ள சித்தர்கள்

1. ஸ்ரீ சிவவாக்கியசித்தர்
2. ஸ்ரீ கயிலாய கம்பணி சட்டை முனிசித்தர்
3. ஸ்ரீ மகாபோகர் சித்தர்
4. ஸ்ரீ காக புஜண்டர் சித்தர்
5. ஸ்ரீ புலிப்பாணி சித்தர்
6. ஸ்ரீ சட்டைமுனி ஸ்வாமி
7. ஸ்ரீ அகப்பேய் சித்தர்
8. ஸ்ரீ அழுகணி சித்தர்
9. ஸ்ரீ குதம்பைச் சித்தர்
10. ஸ்ரீ வள்ளலார் ஸ்வாமிகள்
11. ஸ்ரீ இடைக்காடர் சித்தர்
12. ஸ்ரீ பட்டினத்தார் சித்தர்
13. ஸ்ரீ கடுவெளிச்சித்தர்
14. ஸ்ரீ சஞ்சமலை சித்தர்
15. ஸ்ரீ கபிலர் சித்தர்
16. ஸ்ரீ கருவூரார் சித்தர்
17. ஸ்ரீ பட்டினத்தார் சித்தர்
18. ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர்

## 1. கலாங்கி நாதர்

இவர் சீனநாட்டவர். இவர் அந்தரத்தில் சஞ்சரிக்கும் உடலைப் பெற்றவர். கால்+அங்கி (கால்–காற்று, அங்கி–உடல்) இவருக்குக் 'காலாக்னி நாதர்' என்ற பெயரும் உண்டு. இவர் திருமூலரின் சீடர்களுள்

முதன்மையானவர். வைத்திய காவியம், உபதேச ஞானம் முதலான பல நூல்களை இயற்றியுள்ளார். இவர் காஞ்சியில் சமாதியானார்.

## 2. போகர்

இவர் தமிழகத்தில் பிறந்து சீனாவுக்குச் சென்று போ–யாங்–போகர் என்னும் பெயரில் வாழ்ந்தவர். மீண்டும் தமிழ்நாட்டுக்கு வந்து, பழனி மலையில் வாழ்ந்து அங்கேயே சமாதியானவர். போகரே சித்த மருத்துவத்தின் தந்தையாவார். போகரின் நூல்களில் வேதியியல் பல இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தகுந்ததாகும் . போகர் 12,000 சப்த காண்டம், அட்டாங்கபோகம், வைத்திய சூத்திரம் முதலான பல நூல்களை இயற்றியுள்ளார்.

## 3. கொங்கணச் சித்தர்

கொங்கு நாட்டில் பிறந்தவர். ஆதலால், கொங்கணவர் எனப்படுகிறார். இவர், இரும்புக் கருவிகள் செய்து விற்றுச் செல்வரானவர். பிறகு துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர். இவருடைய பாடல்கள் இனிமையும், கவிநயமும் வாய்ந்தவை. இவர் மூலிகைகளில் செம்பு இருப்பதைக் கண்டு பிடித்தவர். வாதகாவியம் 3,000 வாலைக் கும்மி 100 முக்காண்டங்கள் முதலான பல நூல்களை இயற்றியவர். இவர் திருப்பதியில் சமாதியானார்.

## 4. கருவூர்ச் சித்தர்

இவர் போகரின் சீடர். திருவிசைப்பா பாடிய கருவூர்த் தேவரினின்றும் இவர் வேறுபட்டவர். இவர் பிரம்ம ஞானியாக வாழ்ந்த மகாசித்தர் ஆவார். இவர் வாதகாவியம் 700, வைத்தியம்500, சிவஞான போதம் 42 முதலான பல நூல்களை இயற்றியுள்ளார். இவர் கருவூரில் இறைவனடி சேர்ந்தார்.

## 5. இடைக்காட்டுச் சித்தர்

இவர் மதுரைக்குக் கிழக்கே உள்ள இடைக்காடு என்னும் ஊரில் பிறந்தவர். சோதிட ஆராய்ச்சியில் வல்லவர், நவக்கிரகங்கள் குறித்த ஆராய்ச்சியில் வல்லவர். இவருக்கும் போகரே குருநாதர். இவர் ஊர்வசி பஞ்சரத்தினம், ஞான சூத்திரம் எழுபது முதலான பல நூல்களை இயற்றியுள்ளார். இவருடைய பாடல்கள் எளிய சொற்களால் ஆனவை. இனிய சந்தங்களையும் ஆழமான கருத்துகளையும் உடையவை. இவர் திருவண்ணாமலையில் சமாதியானார்.

## 6. கமலமுனி

இவர் தமிழ்நாட்டில் பிறந்து சீனாவில் வாழ்ந்தவர். கமல முனி சூத்திரம் 76 போன்ற பல நூல்களை இயற்றியவர். இவர் மதுரையில் சமாதியானவர்.

## 7. சட்டை முனிச் சித்தர்

இவர் சிங்கள நாட்டைச் சேர்ந்த சித்தர். இவரும் போகரின் சீடர், சித்தர்கள் தம்முடைய நூல்களை மறைமொழியில் (பரிபாஷையில்) எழுதும் பண்பினர். ஆனால் சட்டைமுனி எல்லாக் கருத்துகளையும் வெளிப்படையாகப் பாடியவர். இவர் ரசவாதத்தை அலசியவர். வேதியியலில் நிபுணர். சட்டை முனி வாத காவியம் 1000, நிகண்டு 1200, முன் ஞானம் பின்ஞானம் 200 முதலான பல நூல்களை இயற்றியவர். இவருடைய நூல்களில் மருத்துவம், வேதியியல் கருத்துகள் மிகுதியாகப் புதைந்து கிடக்கின்றன. சட்டை முனி சீர்காழியில் சித்தி பெற்றவர். திருவரங்கத்தில் இறைவனோடு கலந்தார் என்ற கருத்தும் உண்டு.

## 8. பாம்பாட்டிச் சித்தர்

இவர் பாம்புகளைப் பிடித்துப் படமெடுத்து ஆடச் செய்கின்ற வேடிக்கைத் தொழிலைச் செய்தவர். சட்டை முனி சித்தரால் உபதேசம் செய்யப் பெற்றவர். விஷவைத்திய 'சித்தர்' என்றும் இவரைக் கூறலாம். பாம்பை முன்னிலைப் படுத்திப் பாடும் பாடல்களை இயற்றியவர். இவர், பாம்பு போன்ற குண்டலினி சக்தியைப் பாம்பாக உருவகம் செய்து பாடியவர். ஆதலால் பாம்பாட்டிச் சித்தர் என அழைக்கப்படுகிறார் என்ற கருத்தும் உண்டு. இவர் பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள், சித்தர் ஆரூடம் மற்றும் சில மருத்துவ நூல்கள், ஆகியவற்றை இயற்றியுள்ளார். இவர் திருக்கோகர்ணத்தில் பிறந்து துவாரகையில் சமாதியானவர். இவர் மருதமலையில் ஒரு குகையில் நெடுநாள் தங்கியிருந்தார் என்றும் கூறுவர்.

## 9. பிண்ணாக்கீசர்

இவர் பாம்பாட்டிச் சித்தரின் சீடர். இவர் ஆத்திமரப் பொந்தில் வசித்தவர். உண்பதற்காக மட்டும் வெளியில் வந்து, உண்டபிறகு மீண்டும் மரப்பொந்திற்குச் சென்று விடுவார். இவர் 'மூப்பு சூத்திரம் 17' என்ற நூலைப் பாடியவர். யோகஞான சாஸ்திரத் திரட்டு என்னும் நூலில் இவருடைய பாடல்கள் பல உள்ளன. கேரளத்தில் உள்ள நாங்குநாநேரி என்ற ஊரில் இவர் சமாதி ஆனார்.

## 10. குதம்பைச் சித்தர்

குதம்பை என்பது காதுகளில் அணியும் அணிவகை. இவர் குழந்தைப் பருவத்தில் அந்த அணியை அணிந்திருந்ததால் இவர் சித்தர் ஆன பின்பும் குதம்பைச் சித்தர் என அழைக்கப்பட்டார். இவர் பாடல்கள் தமக்குத் தாமே உபதேசம் செய்து கொள்வது போல் அமைந்திருக்கும். பெரிய பெரிய தத்துவங்களை எல்லாம் எளிமையாகவும், இனிமையாகவும் இவர்

பாடியுள்ளார். குதம்பைச் சித்தரின் பாடல்கள் 246 கண்ணிகளாக உள்ளன. இவருடைய பாடல்கள் சாதிப் பிரிவினைகளைச் சாடுகின்றன. நல்லொழுக்கத்தையும், நல்ல நோன்புகளையும் எடுத்துக்காட்டுகின்றன. அறியாமையை அகற்றவல்லன. இவர் மயிலாடுதுறையில் சித்தி பெற்றவர்.

## 11. கடுவெளிச் சித்தர்

இவர் மனித உடலை, மண் தோண்டியாக உருவகித்துப் பாடியவர், உடல் உள்ளபோதே, ஆன்மா கடைத்தேற வழிகாண வேண்டும் என்று விரும்பியவர். எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்தவர் இவர். காஞ்சிபுரத்தில் சமாதியானவர்.

## 12. அகப்பேய்ச் சித்தர்

அகம் + பேய் + சித்தர். மனமாகிய பேயை வென்று சித்தியடைந்தவர் என்னும் பொருளில் இவரது பெயர் அமைந்துள்ளது. இவர் வாத, வைத்திய, யோக ஞான மார்க்கங்களை எளிய இனிய பாடல்களால் பாடியவர். இறைவனடி சேர்வதற்கு நஞ்சு உண்ண வேண்டாம்; மனம் போனபடி திரிய வேண்டாம்; வேறு துன்பங்களை மேற்கொள்ள வேண்டாம்; மனத்தை மட்டும் அடக்கினால் போதும் என்று பாடியவர். இவர் பூரண ஞானம் 15, அகப் பேய்ச் சித்தர் பாடல்கள் 90 முதலான நூல்களை இயற்றியுள்ளார். இவர் திருவையாற்றில் சமாதி அடைந்தார்.

## 13. அழுகுணிச்சித்தர்

இவர் ஊரையும் உலகத்தையும் தன்னையும் பார்த்துப் பார்த்து அழுத சித்தர். இவர் ஓரிடத்தில் தங்காமல் எவரிடமும் பேசாமல் அழுது கொண்டே செல்பவர். ஆதலால் அழுகுணிச் சித்தர் ஆனார். 'வையூரிலேயிருந்து பலமூரிலே பிறந்து மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்' என்று

வேதாந்தம் பாடியதோடு, வைத்தியம் முதலானவற்றையும் பாடியுள்ளார். அழுகுணிச் சித்தர் பாடல் 200. ஞானசூத்திரம் 23 முதலான நூல்களை இயற்றியுள்ளார். இவர் நாகப்பட்டினத்தில் சமாதியானார்.

## 14. குருராசச் சித்தர்

இவர் திருமூலரின் சீடர். திருமூலரின் நூல்களைக் காப்பாற்றியவர். இவர் சிவகாமித் தாயைத் தியானம் செய்தவர். சிவகாமித் தாயின் கட்டளையால் பிற சித்தர்களைப் போல் மறைவடக்கமாகக் கருத்துகளைக் கூறாமல் வெளிப்படையாகப் பாடியவர். அதனால் பிற சித்தர்களின் சினத்திற்கு ஆளானவர். காவியம் 1000, சூத்திரம் 70, சிவயோக சிந்தாமணி 50 முதலான நூல்களைப் பாடியவர்.

## 15. புலிப்பாணிச் சித்தர்

இவர் போகரின் மாணவர். நவபாஷாணத்தால் பழனி முருகப்பெருமான் சிலையைச் செய்வதற்கு உதவியவர். இவர் மருத்துவத்திலும், சோதிடத்திலும் வல்லவர். புலிப்பாணி வைத்தியம் 500, புலிப்பாணி சோதிடம் 300, புலிப்பாணி ஜாலம் 325 முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

## 16. சிவவாக்கியர்

இவர் பிறக்கும் பொழுதே 'சிவசிவ' என்று சொல்லிக் கொண்டே பிறந்தவர். 'அரியும் சிவனும் ஒன்று; நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்' என்னும் சமயம் மற்றும் சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளுக்கு வித்திட்டவர். யோக சாதனை பற்றிச் சிறப்பாகப் பாடியவர். மேலும் வைத்தியம் முதலான துறைகளைப் பற்றியும் பாடியவர். இவருடைய பாடல்கள் சிவ வாக்கியம் என்னும் நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. இவர் கும்பகோணத்தில் சித்தியடைந்தார்.

## 17. சுப்பிரமணிய சித்தர்

இறைவன் முருகப் பெருமானே சுப்பிரமணிய சித்தர் என்ற கருத்தும் உண்டு. இவருடைய நூல்கள் அகத்தியமா முனிவருக்கு உபதேசம் செய்வது போல் அமைந்துள்ளன. சுப்பிரமணியர் வைத்திய விஞ்சை 1500, சுப்பிரமணியர் ஞானம் 25, சுப்பிரமணியர் நாடி 32, முதலான பல நூல்களைத் தந்துள்ளார். மகப்பேறு உண்டாவது பற்றியும், பிறக்கும் குழந்தையின் எதிர்காலம் பற்றியும் சுப்பிரமணிய சித்தர் கூறும் கருத்துகள் மிகச்சிறந்த வாழ்வியல் கருத்துகளாக விளங்குகின்றன.

## 18. பட்டினத்துச் சித்தர்

சென்னையில் உள்ள அடியார் திருத்தலங்களில் சிறப்புடைய தலம் பட்டினத்தார் திருத்தலம். தனித்திருக்கோயிலாக உள்ளது. [14] சென்னையில் அடியார்கள் சிலரும் வாழ்ந்துள்ளனர். அவர்கள் பக்தர்களுக்கு அருள் செய்து நல்வழி காட்டுகின்றனர்.

சித்தர் கோயில் என்று அழைக்கப்படும் ஒருசில கோயில்களில் தனியாரிடம் உள்ளதால் வேறு தெய்வங்களோடு இணைத்தும் மறைத்தும் தகவல் தருகின்றனர்.[15]

அருள்மிகு பட்டினத்தார் திருக்கோயில் திருவொற்றியூர் கடற்கரையில் அமைந்துள்ளது. கடற்கரையோரம் அமைந்துள்ள திருக்கோயில். உள்ளே செல்கையில் இடது பக்கம் நந்தவனம் அழகுற அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது. கோயில் உள்பகுதியை அடையுமுன் மலர்கள் விற்பனைக்கான கூடம் உள்ளது. வெண்மணல் நடுவே கருங்கல் அமைத்து வழியமைத்துள்ளனர்.

பட்டினத்தார் கோயில் கிழக்கு முகமாக உள்ளது. கோயில் அருகே உள்ளே செல்லும் முகப்பில் தீபம் ஏற்றுமிடம் உள்ளது. பட்டினத்தார் கோயில் வெளிப்பகுதி மணல் தரையாகவும் கருங்கல் பதிக்கப்பட்டும் அமைந்துள்ளது. கோயில் நுழைவாயிலில் பெரிய ஆலயமணி உள்ளது.

சுற்றிலும் மதிற் சுவர் அமைந்துள்ளது. ஒற்றைக் கலசத்துடன் கோயில் விமானம் உள்ளது. கோயில் முன்பக்கத்தே பலிபீடம் உள்ளது. நந்தி அடுத்து தனி விமானம் போன்ற அமைப்பில் இடம்பெற்றுள்ளார். கோயில் உள் பிரகராத்தே மடப்பள்ளி யொன்று உள்ளது. கோயில் முன்புறம் தியான மண்டபம் உள்ளது. கோயில் முன்பக்க மண்டபமும், தியான மண்டபமும் 26.1.1915ல் அப்போதைய இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் செந்தூர் பாண்டியால் திறக்கப்பட்டுள்ளது.[16]

தியான மண்டபம் அமைதி திருக்கூடமாக விளங்குகிறது. கோயில் முழுமையும் அமைதியாகவே காட்சியளிக்கிறது. ஆய்வாளர் நேரில் தரிசனம் செய்த நாள் 12.3.2015. [17]

பட்டினத்துச் சித்தர் வாழ்வும், வாக்கும் என்னும் நூல்வழியே பட்டினத்தார் வாழ்க்கை வரலாற்றை அறிய முடிகிறது. [18] கவிஞர் கண்ணதாசன் திருவொற்றியூரில் அச்சகம் ஒன்றில் பணிபுரிந்த நிலையில் பட்டினத்தார் சமாதிக்குத் தினமும் வருவார். அதுவே பின்னர் தான் உயர்வடையக் காரணம் எனத் தன் சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்[19].

காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, சித்தராகி, பல சித்துகளைப் புரிந்தவர். கோயில் நான்மணிமாலை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை போன்ற பல நூல்களை இயற்றியவர். 'காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' என்ற வேதாந்தக் குரலுக்குச் சொந்தக்காரர்.

## ஸ்ரீ மத் சிதம்பர பெரிய சுவாமிகள்

சென்னை – வேளச்சேரியில் காந்தி நகர்ப் பகுதியில் பிரதான சாலை அருகே உள்ள கோயில் இவரது திருக்கோயில். கோயில் கோபுரம் ஐந்து கலசங்களுடன் விளங்குகிறது. மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளது.[20]

**'ஸ்ரீமத் சிதம்பர பெரிய சுவாமிகள் ஜீவத்திருக்கோயில்,**

வேளச்சேரி மெயின் ரோடு,

சென்னை–42

என்ற பெயர்ப்பலகை ஸ்ரீமத் சிதம்பர பெரிய சுவாமிகள் படத்துடன் காணப்படுகிறது.

'பலகையில் உள்ள வாசகமே' பெரிய சுவாமிகளின் கருத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

***என்னை நீ சரணடை உன்னை நீ உணர்வாய்***
***குருவே பிரம்மம்"***
***இறைதேடு! இறைவனைத்தேடு!***

கோயில் மேற்குப் பார்த்த வாயில் வழியே உள்ளே செல்லும் வகையில் உள்ளது. ஆய்வாளர் நேரில் தரிசித்த நாள் **11.3.2015.**

## மயிலை அப்பர் சாமி

இராயப்பேட்டை நெடுஞ்சாலையில் ஆஞ்சநேயர் கோயிலுக்கு எதிரில் உள்ளது. மயிலாப்பூரிலிருந்து மிக அருகில் அமைந்துள்ளது. கோயில் விசாலமான இடத்தில் அமைந்துள்ளது. இராஜகோபுரம் இல்லை. கொடி மரம், பலி பீடம், நந்தி உள்ளது.[21] **மூலவர்** : காசி விசுவநாதர். இவரே அப்பர்சாமி என்றழைக்கப்படுகிறார். சைவ அடிகளார் அப்பர் சுவாமிகள் தற்போதுள்ள கோயிலிடத்தில் ஆனிமாதம் **1851**இல் பிரம்ம

சமாதியடைந்தார். அவருடைய பெயரில் ஒரு இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து 1855இல் அவரது நினைவாக பதினாறு கால் மண்டபமுள்ள கோயிலை அமைத்தனர்.[22]

1947–ல் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இக்கோயில் கொண்டு வரப்பட்டுள்ளது. 1993இல் நூற்றாண்டுப் பூசை கொண்டிடப்பட்டுள்ளது.

### வான்மீகர்

திருவான்மியூர், மருந்தீசுவரர் கோவிலை அடுத்துப் பேருந்து வழித்தடத்தில் வான்மீகி என்னும் அடியார் திருக்கோவில் அமைந்துள்ளது. நாள்தோறும் ஒரு முறை மட்டும் பூசை நடைபெறுகிறது. [23]

### பாடகச் சேரி சுவாமிகள்

பாடகச்சேரி சுவாமிகளின் திருக்கோவில் கிண்டி இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ளது. தற்போது மேம்பாலம் மெட்ரோ இரயில் பாலம் ஆகியவற்றிற்கு இடையே சிறிய அளவில் இக்கோவில் காணப்படுகிறது. நாள்தோறும் காலை மாலை இருவேளையும் பூசை நடைபெறுகிறது. [24]

### உரோம முனிவர்

திருவொற்றியூரில் தேரடிப் பேருந்து நிலையம் அருகில் எல்லையம்மன் கோவிலுக்கு அருகில் உரோம முனிவரின் திருக்கோவில் அமைந்துள்ளது. தொண்டைமான் திருவொற்றியூர் வந்தபோது உரோம முனிவரை வணங்கினான். அப்போது உரோம முனிவரின் வேண்டுகோளின்படி காஞ்சிபுரத்தை அடைந்த மன்னன், ஐந்து சிவலிங்கங்களைக் கொண்டு வந்து திருவொற்றியூரில் கோவில்

ஏற்படுத்தினான் என்றும் திருவொற்றியூர்த் தலபுராணம் வழியாக அறிய முடிகிறது. காலையும் மலையும் இக்கோயிலில் பூசை நடைபெறுகிறது. [25]

## இராமலிங்க வள்ளலார்

திருவொற்றியூரில் பட்டினத்தார் திருக்கோவிலுக்கும் பேருந்து நிலையத்திற்கும் இடையில் வள்ளலார் தங்கியிருந்த மடம் உள்ளது. இங்கு வள்ளலார் தங்கியிருந்து பாடல் இயற்றியதாகத் தெரிவிக்கின்றனர். இத்திருக்கோவிலில் சிவலிங்க வழிபாட்டுடன் வள்ளலார் வழிபாடும் நடைபெறுகிறது.[26]

## அந்து சாமி மடம்

சென்னையில் பெரம்பூரில் அந்துசாமி மடம் என்னும் அடியார் திருக்கோவில் அமைந்துள்ளது. இங்கே அந்துசாமி என்னும் அடியவர் குடியிருந்ததாகத் தெரிகிறது. யாருடைய கண்ணுக்கும் புலப்படாமல் வாழ்ந்த அவரை இரகசியமாகப் பார்க்க நினைத்தால் அவரது உடலானது பல கூறுகளாகத் தான் தோன்றும் என்று கூறுகின்றனர். தற்போது இந்தக் கோவிலில் நாள்தோறும் வழிபாடு நடைபெறுகிறது. பெரம்பூர் இரயில் நிலையத்திலிருந்து மூலக்கடைக்குப் போகும் வழியில் மாதவரம் நெடுஞ்சாலையில் இந்த மடம் அமைந்துள்ளது.[27]

## சச்சிதானந்த சுவாமிகள்

வேளச்சேரி–தாம்பரம் நெடுஞ்சாலையில் இராஜ கீழ்ப்பாக்கத்தில் சச்சிதானந்த சுவாமிகளின் சமாதி அமைந்துள்ளது. இங்கே சுவாமிகள் வாழ்ந்து ஜீவசமாதி அடைந்ததாகத் தெரிவிக்கின்றனர். இங்கே ஆண்டுதோறும் குருபூஜை என்னும் நிகழ்வு சிறப்பாக நடைபெறுகிறது. வாரந்தோறும் சிறப்புக் கூட்டமும் வழிபாடும் நடைபெறுகிறது.[28]

### யாகவா முனிவர்

மேடவாக்கத்தில் இல்லறத்தில் இணைந்து வாழ்ந்த முனிவர் யாகவா முனிவர். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இவர் இளமையில் மாடுமேய்க்கும் பணியைச் செய்தவர். முற்காலத்தையும் பிற்காலத்தையும் அறிந்த முக்கால ஞானியாக விளங்கிய இவர் அண்மையில் காலமானார். புதிய மொழி ஒன்றை உருவாக்கி அந்த மொழியில் பறவைகளுடன் பேசும் ஆற்றல் கொண்டிருந்த இவர் சொன்னது சொன்னபடி நடந்தது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.[29]

உலகத்தில் தோன்றிய உயிர்களுள், மக்கள் மட்டுமே வாழும் உயிர்கள்; வாழப் பிறந்த மக்கள் வாழ்வாங்கு வாழ நெறிகள் பல உள்ளன. அத்தகு நெறிகளையே 'வாழும் நெறிகள்' அல்லது 'வாழ்க்கைக் கல்வி' எனச் சுட்டுகிறோம். இத்தகைய வாழ்க்கைக் கல்வியைச் சான்றோர் பலர் வகுத்துக் காட்டியுள்ளனர்.

வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்தோருள் சித்தர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர். மக்களாகப் பிறந்து, மக்கள் சக்தி மகத்தான சக்தி என மாநிலத்திற்கு அறிவுறுத்தி, மக்களில் மேம்பட்டவர்களாக வாழ்ந்தும் காட்டியவர்கள் சித்தர்கள். இத்தகைய சித்தர்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள், மக்களாகப் பிறந்த நமக்குப் பேருதவியாக இருக்கும் என்பதாலும் சித்தர்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த திருமூலர் அருளிய திருமந்திரத்தில் வாழ்வியல் நெறிகள் வளமாகக் கூறப்பெற்றிருப்பதாலும் அவற்றை, மக்கள் உணர்ந்து பின்பற்ற வேண்டும்.

பல தெய்வ வழிபாடு செய்தல் அதனால் பகையை வளர்த்துக் கொள்ளுதல், மூடநம்பிக்கைகளைக் கைக்கொள்ளுதல், போலிச் சடங்குகள்பால் பற்றுக்கொள்ளுதல், தெய்வத்தின் பெயரால் உயிர்ப்

பலியிடுதல், ஆடம்பரமாகப் பூஜைகளையும் விழாக்களையும் மேற்கொள்ளுதல், மக்களின் அறியாமையைப் பயன்படுத்திப் போலித் தனமான சின்னங்களையும் வேடங்களையும் காட்டி மயக்குதல், உருவ வழிபாடு மற்றும் பொருந்தாத விரதங்கள், பொய்யான சோதிடங்கள் முதலானவற்றை ஏற்றுப் பேணுதல், ஆன்மிக வழி நின்று அருளைப் பெருக்குவதற்குப் பதிலாகப் பொருள் தேடும் புன்மைப் போக்குகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலான பல ஆசைகளுக்கு ஆட்பட்டுத் துன்புறுதல், புகை, கஞ்சா, மது போன்ற தீய பழக்கங்களை மேற்கொண்டு உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளுதல், அருந்துதலிலும் பொருந்துதலிலும் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டு நோய் நொடிகளைத் தேடிக் கொள்ளுதல் நோய் வந்துற்றபின் போலியான மருத்துவர்களை நம்பிக் கவர்ச்சியான மருந்துகளைப் போற்றி இறப்பைத் தழுவுதல், பொய், களவு, வஞ்சம், ஏமாற்று அடுத்துக் கெடுத்தல், புறங்கூறல், பிறன்மனை இச்சை, பொருந்தாக் காமம் முதலான தனிமனித ஒழுக்கக் கேடுகளால் மனித மாண்பைத் தாழ்வுறச் செய்தல், தன்னல விழைவு காரணமாகப் பொதுநலம் பேணாமை; மனித நேயத்தை வளர்க்காமை மொழி, இனம், சாதி, செய்தொழில், சமயம் காரணமாக; தனிமனித வேற்றுமைகளை வளர்த்துக் கொள்ளுதல் அதனால் போரும் பூசலும் மேற்கொள்ளுதல், இன்னபிற குறைபாடுகளால் தனிமனித வாழ்க்கை தடுமாறிக் கொண்டிருக்கிறது.

நவீனம் என்ற பெயரில் உணவுநெறி, உடலோம்பும் நெறி, விருந்தோம்பல் பண்பு, சுற்றம் தழுவுதல், சகிப்புத்தன்மை முதலான நம் பாரம்பரியப் பண்பாட்டிற்கே உலைவைத்தல், கொல்லா நெறியும் பொய் சொல்லா நெறியும் மனித சமுதாயத்திற்கு மட்டுமே உரியன என்பதை மறந்து

மயங்குதல், வாய்மையும் தூய்மையும் கொண்ட தொண்டுநெறியே தூயநெறி என்னும் மெய்ம்மையைப் புறந்தள்ளிப் பொதுத்தொண்டு என்ற பெயரில் தமது ஆசாபாங்களுக்கு வழி வகுத்துக் கொள்ளுதல், நீதி,நேர்மை நியாயம் போன்ற அறவுணர்வுகளுக்கு அப்பால் செயற்படுதல் முதலானவை சமுதாய வாழ்க்கைப் பிறழ்வுகளாகப் பெருகிக்கிடக்கின்றன.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்; மனிதகுலம் மனித இனம் ஒன்றே' என்னும் உயரிய கோட்பாடுகள், உலகில் தழைக்கச் சித்தர்கள் காட்டும் வாழ்வியற் கல்வி, இளைய தலைமுறைக்குப் பெரிதும் தேவை.

இக்கால மனிதன் தன்னைப் பண்படுத்திக் கொள்ளப் பெரிதும் துணை செய்வன சித்தர் கல்விமுறைகள் என்பதனை இளந்தலை முறையினருக்கு எடுத்துக் கூறி உடம்பை வளர்க்கும் உபாயங்களைச் சித்தர் கல்வி கூறுகிறது.

வடமொழி– தென்மொழிச் சண்டையயை நீக்கச் சித்தர் கல்வி உதவும் என்பதையும் உணர்தல் வேண்டும். இன்றைய மனிதகுலம் மாண்புற்றுத் திகழப் பெரிதும் துணை செய்வன சித்தர் கல்வியாகும்.

சித்தர்கள் மக்களாய்ப் பிறந்து மனித நிலையிலிருந்தும் மேம்பட்டவர்கள் அந்தச் சித்தர்கள் மருத்துவ அறிஞர்களாகவும் ஆன்மிகப் புரட்சியாளர்களாகவும் சமுதாயச் சீர்திருத்தவாதிகளாகவும் விளங்கியவர்கள்.

சித்தர்களின் கொள்கைகளும் தத்துவங்களும் நாட்டில் பரவினால் மக்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் ஓங்கும். சித்தர்கள் மனித ஆற்றலின் மகத்துவத்தை மண்பதைக்கு உணர்த்தியவர்கள் ஆவர். மனிதனின் அடுத்த பரிணாம வளர்ச்சியைக் கண்டவர்கள் சித்தர்கள் என்பதை அறிதல் நலம் பயக்கும். இனம், மொழி, மதம், நாடு என்ற குறுகிய கண்ணோட்டமின்றி,

மனித குலம் முழுமைக்கும் நன்மைதரும் கருத்துகளைத் தந்தவர்கள் சித்தர்கள்.

சித்தர்கள் தாம் அறிந்திருந்த சாகாக்–கலை, உடல்அழியா நிலை அண்ட வெளியில் சஞ்சரித்தல் இருந்த இடத்திலிருந்தே உலகத்தின் எந்த மூலையில் எது நடந்தாலும் அறிந்து கொள்ளும் ஆற்றல் முதலான சித்த ஆற்றல்களையும் அவற்றுக்கான பயிற்சிகளையும் அறிந்து மேற்கொள்வது இன்றியமையாத் தேவை ஆகும்.

சித்தர்கள் பின் பற்றிய உடலோம்பும் முறைகளைக் கையாண்டால், உடலை வச்சிரம் போல் ஆக்கிக் கொள்ளலாம்.

இந்திய நாடு பல்வகை மரபினரையும் இனத்தவரையும், மதத்தவரையும் மொழியினரையும் கொண்டநாடு. எனினும் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் ஒருமைப்பாட்டு உணர்வோடு ஒன்றுபட்டு நிற்கின்றது. இது போன்ற நாடுகளில் சமய ஒற்றுமை, வகுப்பு ஒற்றுமை, இனஒற்றுமை, மொழிஒற்றுமை போன்றவை மிகவும் இன்றியமையாதவையாகின்றன.

# சான்றெண்விளக்கம்


1. சாமி சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞானத் தத்துவம், ப.8.
2. சித்தர் பாடல்கள், பூம்புகார் பிரசுரம், ப.20.
3. சித்தர் பாடல்கள் , செண்பகா வெளியீடு, ப.62.
4. மேலது, ப.63.
5. மேலது, ப.66
6. குறுந்தொகை, பா.130.
7. பாம்பாட்டிசித்தர், பா.எண்.30.
8. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி, ப.320.
9. நிஜானந்த போதம், ப.123.
10. அபிதான சிந்தாமணி, ப.121.
11. போகர் ஜனன சாகரம் – முன்னுரை.
12. பெரியஞானக் கோவை, ப.119.
13. ஸ்ரீ சக்ர மகாமேரு ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள், பிருந்தாவன அறக்கட்டளை வெளியீடு, சென்னை.
14. ஆய்வாளர் நேர்கண்ட நாள்–11.2.2015.
15. ஆய்வாளர் – முருகன் நேர்காணல் நாள் 11.2.2015.
16. ஆய்வாளர் நேர்கண்ட நாள் – 11.2.2015.
17. ஆய்வாளர் நேர்கண்ட நாள் 11.2.2015.
18. பட்டினத்துச் சித்தர் வாழ்வும் வாக்கும், ப.5.
19. கண்ணதாசன், வனவாசம், ப.120.

20. ஆய்வாளர் நேரில் கண்ட நாள் 17.3.2015.

21. ஆய்வாளர் நேர் கண்ட நாள் 23.4.2015.

22. ஆய்வாளரிடம் தண்டபாணி குறிப்பிட்டது நாள் 23.4.2015.

23. ஆய்வாளர் நேர்கண்ட நாள் 25.04.2015.

24. மேலது.

25. மேலது 27.04.2015.

26. மேலது 27.04.2017.

27. மேலது 29.04.2017.

28. மேலது 29.04.2017.

29. மேலது 29.04.2017.